செய்தி வெளியீடு எண்: 535 நாள் : 25.10.2015

# செய்தி வெளியீடு

நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை மற்றும் ராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய பாக் வளைகுடா பகுதியினைச் சேர்ந்த மீனவர்கள், தங்களது பாரம்பரிய மீன்பிடிப்பு பகுதியில் மீன்பிடிப்பில் ஈடுபடும்போது இலங்கை இராணுவத்தினரால் அவ்வப்போது கைது செய்யப்படுகின்றனர். இவ்வாறு தமிழக மீனவர்கள் கைது செய்யப்படும்போது, அவர்கள் விடுதலை செய்யப்படுவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் மேற்கொண்டு வருகிறார்கள். கடந்த 2011-ஆம் ஆண்டு மே திங்கள் முதல், நாளது தேதிவரையில் 73 கடிதங்கள் வாயிலாக தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் தாக்கப்படுவது மற்றும் கைது செய்யப்படுவதை தடுத்து நிறுத்திடவும், கைது செய்யப்பட்ட மீனவர்களை விடுவிக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை தொடர்ந்து வலியுறுத்தியுள்ளார்கள்.

நாகப்பட்டினம், புதுக்கோட்டை, தூத்துக்குடி மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களைச் சார்ந்த மீனவர்கள் தங்களுடைய பாரம்பரிய பாக் வளைகுடா மற்றும் மன்னார் வளைகுடா கடற்பகுதிகளில் மீன் பிடித்துக் கொண்டிருக்கும்போது, கடந்த 22.9.2015 முதல் 14.10.2015 வரை இலங்கை கடற்படையின் தொடர் கைது நடவடிக்கைகளுக்கு ஆளாகி இலங்கை சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர். இதனையறிந்து துயரமுற்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தமது 22.9.2015, 25.9.2015, 30.9.2015, 2.10.2015, 11.10.2015, 13.10.2015 மற்றும் 14.10.2015 ஆகிய நாளிட்ட கடிதங்கள் மூலம் தமிழக மீனவர்கள் கைது பற்றிய விவரங்களை மாண்புமிகு பாரதப் பிரதமரின் கவனத்திற்கு கொண்டு சென்றார்கள். அக்கடிதங்களில், இலங்கை கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்டு இலங்கை சிறையில் வாடும் அப்பாவி தமிழக மீனவர்களையும், அவர்களது மீன் பிடி படகுகளையும் உடனடியாக விடுவிக்க உரிய ராஜாங்க ரீதியான நடவடிக்கைகளை மத்திய அரசு எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்கள். அது மட்டுமன்றி, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள், இந்நிகழ்வில் நேரடியாக தலையிட்டு அப்பாவி தமிழக மீனவர்கள் மீது இலங்கை

கடற்படையினரின் தொடர் கைது நடவடிக்கைகளை தடுத்து நிறுத்திட வேண்டும் என்று வலியுறுத்தி உள்ளார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் மேற்கொண்ட தொடர் முயற்சிகளின் பயனாக, இலங்கை சிறைகளில் வாடும் 86 மீனவர்கள், 28.10.2015 அன்று இலங்கை அரசால் விடுவிக்கப்படுவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது. இதனைத் தொடர்ந்து, இலங்கை சிறைகளில் உள்ள தமிழக மீனவர்களை விரைவில் தமிழகம் அழைத்து வருவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் தமிழக அரசு மேற்கொள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

மத்திய அரசு கேட்டுக் கொண்டதற்கிணங்க, தமிழக சிறையில் உள்ள இரண்டு இலங்கை மீனவர்களை நல்லெண்ண அடிப்படையில் 28.10.2015 அன்று விடுவிக்கவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.
நாள் : 25.10.2015.